## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.58/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செங்கல்ராஜு | மதம் | : இந்து |
| த/பெ | : ராஜகோபாலராஜு | ஜாதி | : -- |
| வயது | : 64 | கிராமம் | : பீரகுப்பம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**13.02.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். யார் அழைத்து நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் 2 ம் வாதி சுப்பிரமணியராஜு த/பெ சுப்பராஜு அழைத்துதான் வந்தேன். நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜெயராமராஜு, சுப்பிரமணியராஜு த/பெ சுப்பராஜு, மற்றொசு சுப்பிரமணியராஜு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். கோவிலில் அவர்கள்தான் அறங்காவலர்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கை அவர்கள் அறங்காவலர்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அறக்கட்டளையை பதிவு செய்துள்ளார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2. எனக்கு இந்த வழக்கு பற்றி தெரியாது என்றால் கோவில் இடம் என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். கோவில் இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று நான் நினைத்தேனா என்றால் நான் சிறியவர் என்பதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி சுப்பிரமணியராஜு ரௌடிகளை வைத்து மிரட்டியதால் வாதிகள் வழக்கு தாக்கல் செய்தார்கள். நான் அதே ஊர் என்றால் ஆமாம். பிரதிவாதி சுப்பிரமணியராஜு தெரு வேறு என்றாலும் எனது தெரு வேறு என்றாலும் ஒரே தெருதான். ஆனால் பிரதிவாதியின் அப்பா பெயர் தெரியாது என்றால் சரிதான். நான் எந்த காலத்திலும் அந்த ஊரிலேயே இல்லை என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் பிரதிவாதியின் அப்பா பெயர் தெரிந்திருக்கும் என்றாலும் கோவில்

விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

3. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் 41/1 ஆகும். சுப்பிரமணியராஜு சொல்லித்தான் எனக்கு புல எண் தெரியும் என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சுப்பிரமணியராஜு சொல்லித்தான் எனக்கு வழக்கு புல எண் தெரியும் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் கோவிலுக்கு நன்கொடை கொடுத்ததாக சொல்லியிருப்பதில் அதை பத்திரமாக எழுதி கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. கோவிலுக்கு வாதிகள்தான் பாதுகாப்பாக இருக்கிறார்களா என்றால் ஊரில் பெரியவர்கள் என்பதால் அவர்கள்தான் பாதுகாத்து வருகிறார்கள். 2ம் வாதி சுப்பிரமணியராஜுக்கும் பிரதிவாதிக்கும் முன்விரோதம் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் முன்விரோதம் எதுவும் இல்லை.

4. 2ம் வாதி சுப்பிரமணியராஜுக்கும் பிரதிவாதிக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக உறவினரான வாதிகளை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கோவில் இடமாகும். இது யாருடைய சொந்த இடம் இல்லை. வழக்கை தாக்கல் செய்ய வாதிகளுக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றாலும் நான் வாதிகளுக்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் ராமபத்ர ராஜுக்கு பாத்தியம் என்பது தெரியுமா என்றால் தெரியும். அவர் கோவிலுக்கு எழுதி கொடுத்ததாக சொன்னார்கள். ராமபத்ர ராஜு வழக்கு சொத்தை வெங்கட்ராஜுக்கு விற்ற விவரம் தெரியுமா என்றால் விற்றதாக சொல்கிறார்கள். அந்த வெங்கட்ராஜுதான் பிரதிவாதிக்கு விற்றார் என்றால் சரியல்ல. வாதிகளுக்காக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவில் இடம் என்பதால் சாட்சி சொல்கிறேன்.

(மறு விசாரணை இல்லை)